3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. வி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றம் காண ஏங்கித் தவித்த மக்களின் வாட்டத்தைப் போக்கிடவும், வறுமை நிலையினைப் போக்கிடவும், வளம் கொழித்து வசந்தம் அடைந்திடவும், வகை வகையான திட்டங்களை தினந்தோறும் வாரி வழங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 24 முதல் 28 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையை வெற்றிக் கோட்டையாக மாற்ற இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் (மேசையைத் தட்டும் ஒலி) பணிவோடு வணங்கி, 2011–2012 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவினுடைய எட்டு முதல் பதினாறு வரையிலான 9 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*